


# பொதுசன சேவைக்கான ஊடகம்

## தரமானது நம்பகமானது நெறிமுறையானது

அரச ஊடகங்களை
சனநாயகமயமாக்குவதற்கான இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Annussammil
2006/11/04

# பொதுசன சேவைக்கான ஊடகம்

## அரச ஊடகங்களை மறுசீரமைப்பதற்கான இயக்கம்


**பதிப்பாக்கம்**

சுனந்த தேசப்பிரிய

நதீ கம்மெல்லவீர

முதலாம் பதிப்பு : 2005 ஒக்டோபர்

**பக்க வடிவமைப்பு :**

இரவீந்திர சந்திரலால், சுகந்தி மணிமாறன்

முன் அட்டை : சந்தருவன் சேனாதீர

படங்கள் : இரவீந்திர சந்திரலால்

**வெளியீடு :**

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,

24/2, 28ஆம் ஒழுங்கை, கொழும்பு - 07

தொலைபேசி : 2565304/ 06

மின்னஞ்சல் : cpa@srilanka.net

இணையத்தளம்: www.cpalanka.org

**அனுரசணை - யுனெஸ்கோ**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

ஊடகம் யாருக்காக? எக் குறிக்கோளுக்காக?

குறிப்பாக அரச ஊடகங்கள் யாருக்காக அமைய வேண்டும்? எக் குறிக்கோளை முதன்மையாகக் கொண்டிருக்க வேண்டும்?

அரச துறையாயினும், தனியார் துறையாயினும் ஊடகங்களுக்கான சமூகப் பொறுப்பில் மாற்றம் கிடையாது. ஊடகம் சமூகம் தொடர்பாக சமூகத்தையே விழிப்பூட்டுகிறது. சரியானதும், பக்கச்சார்பற்றதும் சமநிலையானதுமான தகவல்களை அது பிரசைகளுக்கு வழங்குகின்றது. வர்த்தக மற்றும் அரசியல் குறிக்கோள்களுக்கு அப்பால் சென்று பொதுசன சேவையை மாண்புறும் இடத்தில் வைக்கிறது. ஊடகத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் சனநாயக ரீதியிலான வகிபங்கு இதுவேயாகும்.

அரசு என்பது பொது மக்கள் சார்பாக பொது மக்களினால் நியமிக்கப்படும் நம்பிக்கைப் பொறுப்பாகும். அத்தகைய நம்பிக்கை பொறுப்புக்குச் சொந்தமான ஊடகங்கள் நிதமும் பொதுமக்களைக் குறிக்கோளாகக் கொண்டு பொது மக்களுக்காகவே அமைந்திருக்க வேண்டும். இதை வாதப் பிரதிவாதங்களினூடாக நிரூபிக்க வேண்டியதில்லை, அமைதியான நீரைப் போல் அது தெட்டத் தெளிவானது.

அது அவ்வாறு இருப்பினும் கூட நாம் யாவரும் அறிந்த ஓர் உண்மை இருக்கிறது. இந் நாட்டு அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் பொது மக்களுக்கன்றி அரசியல்வாதிகளுக்கே சேவை செய்கின்றன என்பதே அதுவாகும். இது அரசியல் கட்சியின் பிறப்பு வழியையோ வகையையோ அடிப்படையாகக் கொண்டு மாறுவதில்லை. யார் ஆட்சிக்கு வந்தாலும் அரச ஊடகங்கள் ஒரு காவலாளியைப் போன்று நடப்பதுமில்லை நடத்தப்படுவதுமில்லை. மாறாக அவை கட்சிக்கு சார்பான சாதனமாகவே பயன்படுத்தப்படுகின்றன.

இதனால் பெரும் பாதிப்படைவோர் யார்? எதிர்கட்சி அரசியல்வாதிகளே என்று கூறுவது ஜனரஞ்சகமான மூட நம்பிக்கையாகும். குரலெழுப்ப யாருமில்லாத பொது மக்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தாக்குகின்றது. பொதுசன சேவைப் பெறுமதிகளை முதன்மைப்படுத்திக் கவனிப்பதற்குப் பதிலாக அவை அரசியல் சேவைகளிலே ஈடுபடுத்தப்படுகின்றன. பொது மக்களின் தீர்க்கப்படாத தேவைகளை நாளுக்குரிய ஒழுங்குப்பத்திரத்தில் தொடர்ச்சியாக வைத்துக் கொள்வது இதனூடாக நழுவிப் போய் விடுகிறது.

இந் நாட்டுப் பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையில் முகங் கொடுக்கும் அடிப்படைப் பிரச்சினைகள் கடந்த ஐம்பது வருடங்களாக தீர்க்கப்படாமல் இருப்பதற்குப் பொதுசன ஊடக மரபொன்று இல்லாமையும் தாக்கத்தை ஏற்டுத்தியுள்ளது. ஏனைய பொதுசன சேவைகள் நாளுக்கு நாள் நலிவடைவதைத் தடுக்கும் பொறுப்பினை இந் நாட்டு ஊடகங்கள் பெரும்பாலும் கைவிட்டுள்ளன.

நாம் யாவரும் அறிந்தவாறு ஒட்டுமொத்தமாக நோக்கும் போது இந் நாட்டு ஊடகங்கள் யுத்தத்தினதும் பங்காளிகளாவர்.

இருப்பினும் ஊடகங்கள் தொடர்பாக, குறிப்பாக அரச ஊடகங்கள் தொடர்பாக கலந்துரையாடல்கள், விவாதங்கள், விமர்சனங்கள் பொதுச் சமூகத்தினால் நடத்தப்படுவதில்லை. ஓரளவுக்கேனும் இவை தொடர்பான கலந்துரையாடல்களோ விவாதங்களோ தேர்தல் காலங்களில் மட்டுமே இடம் பெறுகின்றன. அது எதிர் தரப்பு அரசியல் கட்சிகளுக்கு சமவாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்காகவேயாகும். இதுவும் முக்கியமானது.

எவ்வாறாயினும் எமது முயற்சியின் முக்கிய நோக்கம் அதுவல்ல. அரச ஊடகங்களை சனநாயக மயமாக்குவதன் பிரதான தேவைப்பாடானது பொதுசன தேவைப்பாடுகளின் மூலம் எழுகிறது. சமாதானம், சனநாயகம் மற்றும் சமூக நீதி என்பவற்றை கட்டியெழுப்புதல் உறுதிப்படுத்துதல் என்ற கோணத்திலேயே நாம் அணுக வேண்டும்.

நியாயமான முறையில் தேர்தல் நடவடிக்கைகளை அறிக்கையிடுவதன் பெறுமதி இப் பொதுவான நோக்கம் ஏற்றுக் கொள்ளப்படும் போதே தோன்றுகிறது. தேர்தல் காலத்தில் வெளியிடப்படும் ஒரு கைநூல் என்பதாலேயே நாம் இதனைக் குறிப்பிடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன ஊடகம் தொடர்பான சொல்லாடலொன்றை கட்டியெழுப்பி, பொது மக்களுடைய புரிந்துணர்வை மேம்படுத்தி அரச ஊடகங்களை சனநாயகமாக்குவதன் பொருட்டுக் கொள்கைகளை உருவாக்குவதும் பொதுமக்களை அணிதிரட்டுவதும் எமது நோக்கமாகும்.

அரச ஊடகங்களை சனநாயக மயமாக்குவதற்கான இயக்கமானது எம்மால் இன்று ஆரம்பிக்கப்படுவதல்ல. இப் பாதையில் மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகள் கடந்த தசாப்தத்தில் காணக் கூடியதாகவிருந்தன. சில முயற்சிகள் மக்கள் குழுக்களாலும், இன்னும் சில ஊடகக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்டன. இவை மாத்திரமல்ல அவ்வாறான முயற்சிகள் அரசியல் சமூகத்திலிருந்தும் தோன்றின.

இவ்வனைத்து முயற்சிகளின் சாரத்தையும், மரபுரிமையையும் இவ்வியக்கத்திற்காக நாம் பெற்றுக் கொள்கின்றோம். அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை சனநாயகமாக்கும் ஆற்றல் செயற்படு முறைமையை ஏற்படுத்திக் கொள்வோம். இவ்வியக்கம் எமது நாட்டிலுள்ள சகல ஊடகங்களுக்கும் ஓர் வழிகாட்டியாக அமையுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.

2005.10.18

சொல் தரும் எளிதான பொருளுக்கமைய பொதுசன சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுசன சேவை ஊடகம்

ஊடகமென்பது, நாட்டின் பொது மக்களுக்காக கடமையாற்றும் ஊடகமாகும், பொதுசன சேவையைத் தவிர்ந்த வேறு எந்த அபிலாஷையும் அதற்குக் கிடையாது.

பொதுசன சேவை ஊடகம் தொடர்பாக உலகம் ஏற்றுக் கொண்டுள்ள வரைவிலக்கணங்களின் பிரகாரம், பொது மக்களுக்குத் தகவல், கல்வி மற்றும் பொழுது போக்குரசனையை வழங்கும் மக்கள் நேய சாதனமே ஊடகமாகும்.

அது பொது மக்களை வெறுமனே தமக்குக் கீழ்ப்படியான பிரசைகளாகவோ வாடிக்கையாளர்களாவோ அன்றி, தமது தீர்வுகளை மேற்கொள்ளக் கூடிய கௌரவமிக்க பிரசைகளாகவே கருதுகிறது.

பொதுசன சேவை எவரையும் தனிச் சிறப்பு வாய்ந்தவராகவோ பாரபட்சமாகவோ கருத மாட்டாது. அது அனைவரையும் சமமாக மதிக்கின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை அன்றி பாதுகாக்க வேண்டிய வேறு ஒரு குழு அதற்கு இல்லை.

## பொது மக்கள்

ஒரு நாட்டினது ஒட்டு மொத்தப் பிரஜைகளின் சமூகம் அந் நாட்டின் பொது மக்கள் ஆவர். இப் பிரஜைகளின் சமூகம் ஓர் இனத்தைக் கொண்டதல்ல. அது பல அடுக்குகளைக் கொண்டுள்ளது.

ஒரு புறம் சமூகத்தில் சிறுவர், கட்டிளம் பருவத்தினர், இளைஞர், வயது வந்தோார், முதியோர் என்ற வகையிலான பல்வேறு குழுக்கள் உள்ளன. ஆண் பால், பெண் பால் என்ற வகையிலும் இரு பிரிவுகள் உள்ளனர். எமது நாட்டைப் போன்ற பல்லின, பல்சமய பன்முகச் சமூகமொன்றில், பல்வேறு மதங்கள், இனங்கள் மற்றும் கலாசாரங்கள் என்பவற்றை பிரதிநிதித்துவம் செய்கின்ற பிரஜைகள் குழுக்கள் உள்ளன. பல்வேறுபட்ட பொருளாதார சமூக மற்றும் கல்வி மட்டங்களைச் சேர்ந்த, பல்வேறு வகையான தொழில்களில் ஈடுபடுகின்ற, பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டுள்ள, பல்வேறு அழகியல் கலைகளில் ரசனையும் வெறுப்பும் கொண்டுள்ள இப் பிரஜைகளின் சமூகம் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது மக்களுக்குச் சேவை செய்யும் பொதுசன ஊடகமானது இச் சமூக கலாசார அரசியல் பல்வகைத் தன்மையை நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும். தகவல், கல்வி, பொழுது போக்கு ரசனை இன்பம் என்பவற்றை வழங்கும் போது அந்த ஒவ்வொரு குழுக்களையும் இலக்காக்கிக் கொள்ளல் வேண்டும். ஒரு சமமான கண்ணியத்துடன் அவ்வெல்லாக் குழுக்களுக்கும் தமது சேவையினை வழங்க வேண்டும்.

இலங்கையைப் போன்ற பல இனங்களினாலும், சமயங்களினாலும், வர்க்கங்களினாலும், சாதிகளினாலும் படிநிலைகள் அமைந்த சமூகமொன்றில் ஓரங்கட்டப்பட்ட சமுதாயத்தவரின் குரலுக்கு இடமளிப்பதன் மூலமாகவும், மாற்று அரசியல் பொருளாதார ஒழுங்குப் பத்திரங்களுக்கு போதிய இடமளிப்பதன் மூலமாகவும் பொதுசன சேவை ஊடகம் முக்கிய பணியை நிறைவேற்றலாம்.

## பொதுசன சேவை

ஊடகம் பொது மக்களுக்கு எவ்வாறு சேவை செய்யலாம்? மேற்குறிப்பிடப்பட்டவாறு தகவல், கல்வி மற்றும் பொழுது போக்கு ரசனை வழங்குதல் என்ற அடிப்படை கட்டமைப்புக்குள் இப் பொதுசன சேவையை நிறைவேற்றலாம்.

இங்கு பொதுசன சேவை ஊடகமானது இரு பிரதான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தொழிற்படுகின்றது.

- மக்களின் தேவைகள் சார்பாகத் தோன்றுதல்
- மக்களுடைய உரிமைகள் சார்பாகத் தோன்றுதல

**பொது மக்களின் தேவைகள்**

மனிதத் தேவைகள் எல்லையற்றவை. நாளுக்கு நாள் அதிகரிக்கக் கூடியவை. எவ்வாறாயினும் எல்லா மனிதத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்பாடுகளையும் நான்கு பிரதான பிரிவுகளின் கீழ் உள்ளடக்கலாம்.

**இருப்பு** : வாழ்வதன் பொருட்டு ஒரு மனிதனுக்குத் தேவைப்படும் அடிப்படை பௌதீக தேவைப்பாடுகள் இதன் கீழ் அமைகின்றன. உணவு, உறைவிடம், சுகாதாரம் போன்ற பல துறைகள் இதில் உள்ளடங்குகின்றன. பொதுசன சேவை ஊடகம் தனது பிரஜைகளின் இவ்வடிப்படைத் தேவைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமாகத் தோற்றுகிறது.

**நன் நடத்தை** : பௌதீக இருப்புக்கு அப்பால் சென்று மாண்புடன் திருப்திகரமாக வாழ்வதே இதன் மூலம் கருதப்படுகிறது. கல்வி, அறிவு, உல்லாசம், அழகியல் இரசனை, ஆக்க பூர்வமான பங்களிப்பு நிலைத்த மேம்பாடு என்பன மட்டுமன்றி அன்பு, பாசம், நட்பு, கருணை போன்ற மனித உணர்வுகளும் மனிதனின் நன் நடத்தைக்கு அத்தியாவசியமாகும்.

**அடையாளம்** : தனது தனிப்பட்ட அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் அதனை மாண்புடன் காட்சிப் படுத்தவும் மனிதனுக்குத் தேவை உள்ளது. பல இனங்களையும் பன்முகக் கலாசாரங்களையும் கொண்டதொரு சமூகத்தில் இத் தேவைப்பாடு நிறைவேற்றப்படாது விட்டால் அங்கு மிகவும் சிக்கலான






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதல்கள் ஏற்படும். சில வேளைகளில் இவை வன்முறை மோதல்களாகவும் வளர்ச்சியடையலாம்.

**சுதந்திரம்** : மேற்குறிப்பிடப்பட்ட எல்லாத் தேவைப்பாடுகளையும் நிறைவேற்றிக் கொள்வது தொடர்பான தெரிவுச் சுதந்திரம் இதுவாகும்.

**பொதுசன உரிமைகள்**

உரிமை என்பது மிகவும் விரிவான ஒரு எண்ணக்கருவாகும். உரிமைகளுக்கும் மேற்படி விபரிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்குமிடையில் ஓர் பரஸ்பர தொடர்பு உள்ளது.

எவ்வாறாயினும் தற்போது உலக மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தனி நபர்களின் பொருளாதார, அரசியல் கலாசார உரிமைகள் என்றவகையில் நாம் இதனை சுருக்கிக் கொள்ளலாம். இவ்வுரிமைகள் தொடர்பாக மக்களை விழிப்பூட்டுதல், அவற்றின் மீறல்களை சுட்டிக்காட்டுதல் மற்றும் இவற்றை மீறுபவர்களுக்கெதிராக பலமான குரலை எழுப்புதல் என்பன ஊடகத்தின் பிரதான பொறுப்புகளாகும்.

இம் மனித உரிமைகளுள் தகவல்களை அறிந்து கொள்ளல், வெளியிடுதல் மற்றும் பேச்சு என்பவற்றுக்கான சுதந்திரம் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. இச் சுதந்திரம் இல்லாமல் ஏனைய சுதந்திரங்களைப் பேண முடியாததால் எல்லா உரிமைகளினதும் பாதுகாவலராக இது கருதப்படுகிறது. ஐக்கிய நாடுகள் அமைப்புக்குரிய மனித உரிமைகள் தொடர்பான சாசனத்தின் 19வது பிரிவின் மூலம் இவ்வுரிமை தெளிவுபடுத்தப்படுகிறது.

தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையானது, ஊடக உரிமையாளர்களது அல்லது ஊடகவியலாளர்களது உரிமையல்ல. அது பிரஜைகளின் உரிமையாகும். ஊடகவியலாளர்கள், ஒட்டு மொத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் உரிமைகளையே பயன்படுத்துகின்றனர். எனவே ஊடகங்களுக்குள்ள சகல சிறப்புரிமைகளினதும் இறுதிப் பொறுப்பானது மக்கள் சமூகத்திற்கே உள்ளது.

## ஊடகம் ஒரு பொதுசன சேவையாக

அரசின் அபிலாஷைகளும், மக்கள் சமூகத்தின் அபிலாஷைகளும் ஒன்றுகொன்று பொருந்தாமையினாலும், அரச நிர்வாகத்தின் கீழுள்ள ஊடகங்கள், பொது மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு செயற்படாதமையினாலும், இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக ஊடகங்களின் மூலம் பொது மக்களின் அபிலாஷைகள் வெளிப்படாதமையினாலும் மக்கள் சேவைக்காக பொதுசன ஊடகம் முன்வந்தது. சமூகத்திற்கான அறிவு மற்றும் கருத்து வெளிப்பாடு ஆகிய மிகவும் பலமான துறைகள் அரசின் அல்லது வியாபாரிகளின் நேரடி அழுத்தங்களுக்குள்ளாகி இருப்பது பாதகமானது என்ற வாதத்தின் அடிப்படையிலேயே இக் கருத்து அலைகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

மக்கள் சமூகம், அரசு மீது வைத்திருந்த நம்பிக்கை அற்றுப் போனதொரு யுகத்தில், ஊடகங்கள் அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்கும் சமூகங்களில் வர்த்தக ஊடக நிறுவனங்கள் உருவாவது, மூலம் மக்களின் உண்மையான அபிலாஷைகளை பிரதிநிதித்துவம் செய்வதற்கான ஒரு மார்க்கமாக அமையுமென முன்னர் ஒரு காலத்தில் கருதப்பட்டது. எனினும் இலாபம் ஈட்டும் அபிலாஷையை முதலாகக் கொண்டு சந்தைக் கோட்பாடுகளின் மீது தொழிற்படுகின்ற ஊடக நிறுவனங்கள், பொது மக்களின் நலனுக்காகச் செயற்படும் என்பது ஒரு முழுமையான உண்மையல்லவென்பதை பல உதாரணங்கள் சுட்டிக்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் மற்றும் வர்த்தக ரீதியிலான அழுத்தங்களின்றி சுயாதீனமாகச் செயற்படுவது, பொதுசன சேவை ஊடக நிறுவனங்களை அரச மற்றும் வர்த்தக ஊடகங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் பிரதான காரணியாகும். இச் சுயாதீனத் தன்மையானது இரு பிரதான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பாதுகாக்கப்படுகிறது.

- பராமரிப்புக்கான பணத்தை பெற்றுக் கொள்ளும் செயற்பாடானது எவ்வித அழுத்தங்களுக்கும் உட்படாமை.
- பொது மக்களுக்குப் பொறுப்புக் கூறும், உண்மையான மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சுயாதீன முகாமைத்துவக் கட்டமைப்பு (நிருவாகக் குழு)

தற்போது உலகில் செயற்படுகின்ற சில பொதுசன சேவை ஊடக நிறுவனங்கள், அவற்றின் பராமரிப்புக்கான பணத்தை தேடிக் கொள்ளும் பல்வேறு மூலங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| பராமரிப்பு மூலம் | பொதுசன சேவை ஊடக நிறுவனம் |
|---|---|
| அரச நிதியம் | அவுஸ்திரேலியாவின் ABC நிறுவனம். கனடாவின் CBC நிறுவனம் |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | பிரித்தானியாவின் BBC நிறுவனம் |
| சந்தாப்பணம் | ஜப்பானின் NHK நிறுவனம் |
| சுயாதீன நிறுவனமொன்றின் மூலம் பொதுசன நிதியங்களை ஒன்று சேர்த்து விநியோகித்தல் | நியூசிலாந்தின் New Zealand on Air நிறுவனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாடுகளில் அரச நிதியங்களின் மூலம் பராமரிக்கப்படுகின்ற ஊடக நிறுவனங்களின் சுயாதீனத் தன்மையை பேணிப் பாதுகாப்பதற்குப் பல்வேறு சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான நிறுவனங்களின் முகாமைத்துவமானது பொது மக்களுக்குப் பொறுப்புக் கூறும் ஒரு சுயாதீன நிர்வாகக் குழுவால் மேற்கொள்ளப்படுகிறது. இலங்கையில் கூட அரச நிதியங்கள் மூலம் பராமரிக்கப்படுகின்ற ஊடக நிறுவனங்களை நேரடி அரசியல் அழுத்தங்களிலிருந்து மீட்டெடுப்பதன் பொருட்டு பல்வேறு சட்ட கட்டமைப்புக்கள் பிரேரிக்கப்பட்டுள்ளன.

## பொதுசன சேவை ஊடகக் கோட்பாடுகள்

சர்வதேசமயத் தன்மை, பல்வகைத் தன்மை மற்றும் சுயாதீனத் தன்மை என்பன பொதுசன சேவை ஊடக மரபின் பிரதான கோட்பாடுகளாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவற்றுக்கு மேலதிகமாக பொதுசன சேவை ஊடகங்கள் ஏனைய வர்த்தக ஊடகங்களிலிருந்து வேறுபடும் விதத்தைக் காட்டுவதற்காக விசேடத்தன்மை / விசேட நிலை என்ற கோட்பாடு பயன்படுத்தப்படுகிறது.

**சர்வதேச தன்மை**

நாடு பூராகவும் பரந்துள்ள சகல பிரஜைகளும் பொதுசன சேவை ஊடகத்தில் நுழையலாம் என்பது இதன் மூலம் கருதப்படுகிறது. இது வெறுமனே தொழில்நுட்பப் பொருளில் விரிவான உள்ளடக்கத்தைக் கருதவில்லை. சமூகத்திலுள்ள சகல பிரஜைகளையும், அவர்களது சமூகப் பொருளாதார நிலைகளையும் கருத்திற் கொள்ளாது ஒரே நிலையில் வைத்துக் கருதும் சமத்துவவாத சனநாயக எண்ணக்கருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன சேவை ஊடகமானது சகல மக்களையும் அரவணைக்கும் வண்ணம், தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த இலக்குக் குழுக்களிடம் தகவல், கல்வி மற்றும் பொழுது போக்கு ரசனை என்பவற்றைக் கொண்டு செல்லல் வேண்டும்.

### பன்முகத் தன்மை

பொதுசன சேவை ஊடகம், பொது மக்களுக்கு வழங்குகின்ற சேவை மூன்று வகையில் பன்முகத் தன்மையைக் கொண்டிருக்க வேண்டுமென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

1. நிகழ்ச்சி வகைகள்
2. இலக்கு வாசகர் மற்றும் நேயர் குழுக்கள்
3. கலந்துரையாடலுக்கு உட்படுத்தும் விடயங்கள்

பல்வேறு குழுக்களுக்காக நிகழ்ச்சிகளை சமர்ப்பிக்க வேண்டும். ஒரு குழுவுக்கு கூடிய கவனத்தையும் இன்னுமொரு குழுவுக்கு குறைந்த கவனத்தையும் வழங்கலாகாது. கலந்துரையாடலுக்கு உட்படுத்தும் விடயங்கள் பெரும் பரப்பெல்லையில் பரந்திருக்க வேண்டும். மேற் குறிப்பிட்ட மனிதத் தேவைப்பாடுகளையும், உரிமைகளையும் அடிப்படையாகக் கொண்டே இவ்விடய எல்லைகள் தீர்மானிக்கப்பட வேண்டும்.

எவ்வாறாயினும் இக் கோட்பாடு தேசிய மட்டத்தில் இயங்கும் ஊடக நிறுவனங்களுக்கே நூற்றுக்கு நூறு வீதம் பொருந்தும். குறிப்பிட்ட ஒரு குழுவையோ சில குழுக்களையோ இலக்காகக் கொண்ட சமுதாய ஊடகங்களிடமிருந்து (community media) அக் குறிப்பிட்ட சமுதாயத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, அவர்களது மன நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதையே எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுயாதீனத் தன்மை

பொதுசன சேவை ஊடகம் என்பது தகவல்கள், கருத்துக்கள், கருத்தியல்கள், விமர்சனங்கள் தடையின்றி சுதந்திரமாக அலை பாயும் ஒரு வளாகமாகும். ஊடகங்கள் அரசியல் மற்றும் வர்த்தக அழுத்தங்களிலிருந்து முற்று முழுதாக விடுபட்டிருந்தால் மாத்திரமே இச் சுதந்திர வெளியிடுதலை பேணிச் செல்லலாம்.

### விசேட நிலை

இது பொதுசன சேவை ஊடகங்கள் ஏனைய வர்த்தக அல்லது அரச கட்டுப்பாட்டு ஊடகங்களிடமிருந்து தனிச்சிறப்பு பெறும் விதமாகும்.

ஏனைய ஊடகங்கள் புறக்கணிக்கும் குழுக்கள் சார்பாகவும், தலைப்புக்கள் தொடர்பாகவும் நிகழ்ச்சிகளை சமர்ப்பிப்பது மட்டும் பொதுசன சேவை ஊடகத்தின் விசேடத் தன்மையல்ல.

பொதுசன சேவை ஊடகங்களுக்கு முற்போக்கு ரீதியான சமூக கலாசார தொலைநோக்குள்ளது. ஒரு நாட்டில் பல்வகை கலாசார அடையாளங்களை மேம்படுத்துதல், ஆக்கபூர்வமாக முழுமையடைந்த எதிர்கால சந்ததியினரைக் கட்டியெழுப்புவதற்காக பங்களிப்புச் செய்தலும் பாதக சமூக முரண்பாடுகளை மறுதலித்தலும், இன, மத, தீவிரவாதத்தை அப்புறப்படுத்தலும், தேசியப் பிரச்சினைகளுக்கு உடன்பாடாக தீர்வுகளை பெற்றுக் கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்குதல் போன்ற வகையில் பொதுசன சேவை ஊடகங்களுக்கு நீண்ட கால நோக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஊடகங்கள் எப்படி?

நம் நாட்டுப் பிரதான ஊடக நீரோட்டத்தில் ஒரு வலுவான பொதுசன சேவை ஊடக மரபு இல்லை. அரச ஊடக நிறுவனங்களுக்கான சட்டவாக்கங்களில் பொதுசன சேவை ஊடகங்களின் குறிக்கோள்கள் ஓரளவுக்குக் காட்டப்பட்டிருந்தாலும் அவை வெறுமனே ஆவணங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டு அரச மற்றும் தனியார் ஊடகங்களின் நிலைமையைப் பொருத்த மட்டில் அவை மேற்படி கலந்துரையாடப்பட்ட பொதுசன சேவை மதிப்பீடுகளை ஒரு போதும் நெருங்க முடியாத மட்டத்தில் உள்ளதென்பதை புதிதாகக் கூற வேண்டியதில்லை.

### ஒரு மாற்றம் அத்தியாவசியப்படுவது ஏன்?

எமது நாட்டின் தற்காலத்து ஊடகப் பயன்பாடானது படு பாதகமான நிலையில் உள்ளதென்பதை புதிதாகக் கூற வேண்டியதொன்றல்ல. அரச மற்றும் தனியார் ஊடகத்துறைகள் இரண்டும் பல்வேறுபட்ட பாதகமான சக்திகளுக்கு இரையாகியுள்ளன. இன்று எம் சமூகம் முகங்கொடுத்துள்ள அரசியல் சமூக மற்றும் கலாசார சீர்கேடு தொடர்பான பொறுப்பினை ஊடகங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் இழுபட்டுச் செல்லும் யுத்தத்தையும், நலிவடைந்த பொருளாதாரத்தையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித விழுமியங்களின் பெறுமதி நாளுக்கு நாள் குறைந்து செல்லும் பெரும் போட்டியும் விரக்தியும் நிறைந்த சமூகத்தையும் கொண்ட எமது நாட்டை மீண்டும் முன்னேற்றப் பாதையை நோக்கி இட்டுச் செல்வதற்காக எடுக்கப்படும் முயற்சியின் போது யதார்த்தபூர்வமான மக்கள் நேய ஊடக மரபினை ஏற்படுத்திக் கொள்வது அத்தியாவசியமாகும். இவ்வாறான ஊடக கலாசாரமொன்று உருவாவதற்கு குந்தகம் ஏற்படுத்தும் நிலைமைகளை இனங்கண்டு அவற்றை வெற்றி கொள்ள நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகும்.

எமது ஊடகங்களுக்கெதிராக சுமத்தப்படும் பாரதூரமான குற்றச்சாட்டு யாதெனில், அவை அதிகளவில் அரசியல் மயமாகியுள்ளன என்பதாகும். அரசியல் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள ஊடகங்கள், பொதுசன சேவை ஊடகங்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பாகிய சுயாதீனத் தன்மையை முற்றாகவே இழந்து விடுகின்றன. எமது நாட்டு அரச கட்டுப்பாட்டிலுள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் அனைத்தும் காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களின் அரசியல் ஊது குழலாகியுள்ளன. இவற்றின் முகாமைத்துவம் முழுமையாகவே அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டுள்ளது.

பல தனியார் ஊடகங்கள் கூட அரச ஊடகங்களுக்கு பின்நிற்காமல் குறிப்பிட்ட உரிமையாளர்களது அரசியல் அபிலாஷைகள் சார்பாக கடமையாற்றுவதன் பொருட்டு தமது ஊடகங்களை கருவியாகப் பயன்படுத்துகின்றன. இரண்டு மூன்று விதிவிலக்குகளைத் தவிர்ந்த நம் நாட்டிலுள்ள ஏனைய சகல தனியார் ஊடகங்களும் ஏதேனும் ஒரு அரசியல் கட்சிக்குப் பக்கச் சார்பாகவுள்ளன. இப் பக்கச்சார்பான தன்மை தேர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களில் பகிரங்கமாக வெளிப்படும். அப்போது அரசியல்வாதிகளின் போட்டிக்குச் சமாந்தரமாக ஊடகங்களுக்கு இடையிலான போட்டியும் உருவாகும். பொது மக்கள் பெரும்பாலும் இப் போட்டிகளின் பார்வையாளர்களாகி விடுவர்.

வர்த்தக மயம் என்பது ஊடகங்களின் சுயாதீனத் தன்மையை சவாலுக்கு உட்படுத்தும் அடுத்த சக்தியாகும். ஊடகமானது இலாபமீட்டும் வியாபாரமென்ற அடிப்படையிலிருந்து தொழிற்படும் போது, பிரஜைகள் வாடிக்கையாளர்களாகவும், ஊடக நிகழ்ச்சிகள், சந்தையில் பரிமாற்றப்படும் பொருட்களாகவும் மாறுவதைத் தடுக்க முடியாது. நம் நாட்டு ஊடகங்கள், சமூக கலாசார பொறுப்புகளை எள்ளளவும் பொருட்படுத்தாது வியாபாரிகளின் சந்தை ஊக்குவிப்புப் பிரசாரத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றன.

பார்வையாளர்களை களைப்படையச் செய்கின்ற தரமற்ற வர்த்தக விளம்பரங்களைப் போலவே சந்தை ஊக்குவிப்புக்காகவே தயாரித்துள்ள கீழ்மட்ட மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளின் மூலம் பொதுசன சமூகத்தின் சிந்தனை மற்றும் ரசனைச் சக்தி மழுங்கடிக்கப்படுகிறது. ஊடகங்கள் வர்த்தக மயமாக்கத்திற்கும் உள்ளாவதன் பயங்கரமான நிலைமை வியாபாரிகளின் இருப்புக்கு தேவையான பாவனையாளர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூகமொன்றை கட்டியெழுப்பும் நீண்ட காலத் திட்டமொன்று நுட்பமாக நடைமுறைப்படுத்தப்படுத்துகின்றது.

ஊடகங்களின் ஏகபோக உரிமையானது இன்று நாம் முகங்கொடுக்கும் ஒரு சிக்கலாகும். ரூபவாஹினி அலைவரிசைகள், வானொலி சேவைகள், பத்திரிகை நிறுவனங்கள் மட்டுமன்றி சினிமாத் தியேட்டர்கள், பிரச்சார நிறுவனங்கள் என்ற வகையில் பல ஊடகங்கள் தனி உரிமையாளருக்குச் சொந்தமாய் இருத்தல் மிகவும் பாதகமானதொரு நிலைமையாகும்.



அரசாக இருப்பினும் தனியார் துறையாக இருப்பினும் தனக்குரிய சமூக அரசியல் ஒழுங்குப் பத்திரங்களைக் கொண்ட ஊடக உரிமை ஏகபோக உரிமையாகுமிடத்து அவற்றுக்கு சமூக அறிவை இயக்கும் எல்லையற்ற அதிகாரம் கிடைக்கும். இது சனநாயக மரபினை ஆபத்துக்குள்ளாக்கும் ஒரு நிலைமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன மன்றும் மொழி ரீதியில் உள்ள துருவமயம் ஊடகம் தொடர்பாக எமது நாட்டிலுள்ள படுபாதகமான ஒரு நிலைமை ஆகும். பல்வகை மொழிகள் மற்றும் பல்லின சமூகம் என்ற வகையில் மட்டுமன்றி நீண்டகால யுத்தத்தின் கசப்பான அனுபவங்களையும், அதனூடாக இனங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இடைவெளியையும் அனுபவிக்கும் சமூகமென்ற வகையில் எமது நாட்டு ஊடகங்களுக்கிடையிலான இப் பிரிவினையானது மிகவும் மனவருத்தத்துக்குரியது. பெரும்பாலும் இப்பிரிவினையின் அடிப்படையானது, உரிமையைக் கொண்டுள்ள இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே தோன்றியுள்ளது.

இத் துருவமயத்தின் பாதகமான விளைவு யாதெனில், அந்தந்த இனக் குழுமங்களை நோக்கித் தகவல்களைக் கொண்டு செல்லும் போது ஊடகங்கள் தமது வாசகர்களுக்கு ஏற்ற வகையில் சமர்ப்பிக்கும் இன ரீதியான பக்கச்சார்பாகும். இந் நாட்டு சிங்கள மற்றும் தமிழ் ஊடகங்களை அவதானிக்கும் போது அவை இரு நாடுகளின் ஊடகங்களை பரிசீலனை செய்வதாகவே தோன்றுகின்றது என பொது நலவாய நாடுகளிற்கான பத்திரிகைச் சபை 2000 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தல் அறிக்கையிடலை கண்காணித்த பின்னர் குறிப்பிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுசன சேவை ஊடகம் – ஒரு மரபினை நோக்கி

## அரசின் வகிபங்கு

ஒரு நாட்டினது ஊடக கலாசாரத்தில் ஆக்கபூர்வமான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான இயக்கத்தின் போது, எம்மைப் போன்ற அரசுகளுக்குப் பாரிய பொறுப்பு ஒப்படைக்கப்படும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், பொதுசன சேவை ஊடகங்களைப் பேணுவதற்கான நடவடிக்கையெடுத்தல் மற்றும் வளங்களை ஈடுபடுத்தல் ஆகிய ஆற்றல்கள் அரசுக்கே உள்ளன. எந்தச் சமூக சேவையை எடுத்துக் கொண்டாலும் அரசுக்கு ஒரு ஆக்கபூர்வமான வகிபங்கு உண்டு என்பதைப் போல பொதுசன சேவை ஊடகத்தை எடுத்துக் கொண்டாலும் அரசுக்கு ஒரு ஆக்கபூர்வமான வகிபங்கு உண்டு.

கருத்து வெளிப்பாடு மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகிய உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு சாட்டப்படுவதாக சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான ஆவணங்களில் பிரதானமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான உலகப் பிரகடனமானது, சர்வதேசத் தொகுதியின் அலகுகளாயுள்ள சகல அரசுகளையும் அடிப்படை மனித உரிமைகளை பேணிப் பாதுகாத்து அவற்றை மேம்படச் செய்வதற்காக இட்டுச் செல்லும் ஒரு சர்வதேச ஆவணமாகும். அதன் 19 ஆம் பிரிவானது, கருத்துக்களை வகித்தல் மற்றும் கருத்துக்களை வெளியிடுதல் ஆகிய மனித உரிமைகளை உறுதிப்படுத்துகிறது.

உலகப் பிரகடனத்தை விடக் கூடுதலான சட்ட வலுவைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை மூலமும் இவ்வுரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையும் இவ்வுடன்படிக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைச்சாத்திட்டுள்ளது. இவ்வுடன்படிக்கையின் 2ஆம் பிரிவு இவ்வுரிமையை பாதுகாப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பினை அரசுக்கு ஒப்படைத்துள்ளது.

அதாவது கருத்துக்களை வகித்தல் மற்றும் வெளியிடுதல் தொடர்பான உரிமைகளை அரசு மீறலாகாது என்பது மட்டுமன்றி, அதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சட்ட மற்றும் ஏனைய நிலைமைகளை அமைப்பதன் பொருட்டு சாதகமான தலையீட்டினையும் அது மேற்கொள்ள வேண்டும்.

இதனை மிகவும் ஆழமான பொருளில் எடுத்து நோக்கும் போது, அரசு மக்களின் அடிப்படை மனித உரிமைகள் சார்பாகத் தோன்றும் பொதுசன சேவை ஊடக நிறுவனங்களை உருவாக்கி, அவற்றை பேணும் பொறுப்பினை நிறைவேற்றுகிறது என்பதன் பொருள் அரசு, அது சபதம் செய்துள்ள சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் ஏற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுகின்றது என்பதாகும். அதேபோன்று இதன் மறுபுறம், அரசு, பொதுசன சேவை ஊடகங்கள் தொடர்பான பொறுப்பினை புறக்கணிக்கின்றது என்பதன் பொருள் அரசு, அது சத்தியப்பிரமாணம் செய்துள்ள மனித உரிமைகளை பேணிப் பாதுகாப்பதன் பொறுப்பினை புறக்கணிக்கின்றது என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடக மறுசீரமைப்பு

பொதுசனத் சேவை ஊடக மரபொன்றுக்காக மேற்கொள்ளப்படும் தலையீடுகளின் போது முன்னுரிமை எவ்விடத்திற்கு வழங்கப்பட வேண்டும்? நிச்சயமாக தற்போதுள்ள அரச ஊடகங்களை பொதுசன சேவை ஊடகங்களாக்குவதற்கே முன்னுரிமை-யளிக்கப்பட வேண்டும். அரச ஊடகங்கள் மீது அடிப்படைக் கவனம் பின்வரும் காரணங்களினாலேயே செலுத்தப்பட வேண்டியுள்ளது.

பொதுசன தேவைகள் தொடர்பாகத் தோன்றுவது அரசினதும் கடமையாகும். ஆகவே பொதுசன சேவை ஊடகங்களைத் தாபிக்கும் பொறுப்பு அரசுக்கு ஒப்படைக்கப்படுகிறது. சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான உடன்பாடுகளும் இது தொடர்பான பொறுப்பினை அரசுக்கே ஒப்படைத்துள்ளது.

- அரசு என்பது ஓர் அரசியல் கட்சியின் கைப்பாவையல்ல. அது பொதுமக்களால் பொதுமக்களுக்காகப் பராமரிக்கும் ஓர் நம்பிக்கைப் பொறுப்பாகும். ஆகவே அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் ஏதும் இருப்பின் அவை பொது மக்களுக்காகவே அமைதல் வேண்டும்.

- இதனை விரிவான பொருளில் நோக்கும் போது அரச ஊடகங்களைப் பேணும் நிதியங்களுக்கான மூலவளம் பொதுமக்களின் உழைப்பு என்பது தெளிவு. இவ்வாறாக நோக்கும் போது அரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் பொதுசன சேவைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இதன்பொருட்டு எத்தகைய தாக்கத்தைக் கொடுக்கவும் பொது மக்களுக்கு உரிமையுண்டு.

- இலங்கையிலுள்ள வர்த்தக ஊடகங்கள், பொதுசன சேவை மரபினை நோக்கிப் பயணிக்குமெனச் சிந்திப்பதற்குக் காரணமாகும் காரணிகள் எதுவுமில்லை. காரணம், ஊடகத்தின் சனநாயக வகிபங்கு தொடர்பான புரிந்துணர்வு இந் நாட்டு ஊடக கலாசாரத்தில் இல்லாமையாகும். ஆகவே ஆரம்பத்தில் மாற்றம் கொண்டு வருவதற்கான சிறந்த நிலைப்பாடு அரச ஊடகங்களை சனநாயகமயமாக்குவதாகும்.

- இலங்கையின் தற்காலத்து நிலைமையின் படி அரச ஊடகங்களில் மேற்கொள்ளப்படும் புரட்சிகரமான மறுசீரமைப்பானது, இந் நாட்டு ஊடக கலாசாரத்தின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். உண்மையான பொதுசன சேவை ஊடக மரபொன்றை தாபிப்பதன் மூலம், ஒட்டுமொத்த ஊடகங்களுக்கே ஒரு முன் மாதிரியை முன் வைக்கலாம். முன் வைக்கவும் வேண்டும். உண்மையான பொதுசன சேவை சார்பாகத் தோன்றும் மக்கள் நேய ஊடகங்கள் இருக்கும் போது, தரம்சார்ந்த ஊடகப் பயன்பாடு தொடர்பாக சிறந்த போட்டி உருவாகும்.

- அரச ஊடகங்களை சனநாயகமயப்படுத்தல் என்பதை ஆழமான பொருளில் எடுத்துப் பார்க்கும் போது, சமுதாய ஊடக சேவைகள், குறிப்பாக சமுதாய வானொலி சேவைகள் இதில் உள்ளடங்கும். சமுதாய ஊடகமென்பது சமுதாயத்தை வலுப்பெறச் செய்யும் சிறந்த கருவியாகும். இலாபத்தை நோக்கமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிராத சமுதாய அடிப்படை வானொலி ஊடகங்களுக்கு சுதந்திரத்தை பெற்றுக் கொள்வது அரசுக்குரிய ஊடக உரிமையை சனநாயக மயப்படுத்துவதாகும்.

- இன்று இலங்கையின் ஊடக வரைபடத்திலுள்ள அளப்பரிய வெற்றிடம் யாதெனில், பிராந்திய ஊடக முறைமையும் ஊடகமும் இல்லாமையாகும். இதனால் மையத்துக்கு வெளியிலுள்ள மக்களின் குரல் அழிந்து போகின்றது. இவ் வெற்றிடத்தை நிரப்பக் கூடிய மிகச் சிறந்த பொறிமுறை சமுதாய அடிப்படை வானொலி சேவைகளேயாகும். இதன் பொருட்டு அரசுக்குச் சொந்தமான ஊடக உரிமையை சனநாயக மயமாக்குவது அத்தியாவசியமாகும்.
- இலங்கையின் தற்காலத்து நிலைமையின் படி தனியார்துறை ஊடகங்கள் காட்டும் வர்த்தகமயமான வலதுசாரி அரசியல் பக்கச் சார்பின் காரணமாக, அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் இருக்க வேண்டுமெனவும் ஒரு வாதம் உண்டு. அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் அரசியல் கைப்பாவைகளாகாமல் இருப்பதற்கு பொறுப்பை ஏற்றால் மட்டுமே இவ் வாதம் நியாயமாகும்.

## கை நழுவிய சந்தர்ப்பங்கள்

இலங்கையில் ஊடக மறுசீரமைப்பைக் கோரி சிவில் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் குழுக்களும், நிறுவனங்களும் ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கியது இன்று நேற்று அல்ல. இந்த ஆர்ப்பாட்ட இயக்கங்களின் பிரதான சுலோகமாக அமைந்தது யாதெனில், அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை அரச அதிகாரத்திலிருந்து மீட்டெடுத்து அவற்றை சுயாதீன நிறுவனங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைப்பதற்குத் தேவையான கொள்கை-யொன்றைத் தயாரிக்க வேண்டும் என்பதாகும்.

நீண்ட காலமாக அரசியல்வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட அழுத்தங்களின் விளைவாக அடிக்கடி ஆட்சிபீடமேறிய அல்லது ஆட்சிபீடம் ஏறுவதற்கு போட்டியிட்ட அரசியல்வாதிகள் ஊடக மறுசீரமைப்புத் தொடர்பாக முன்வைத்த சாதகமான யோசனைகளும் கொண்டு வர முயற்சித்த சட்ட வரைபுகள் சிலவும் உள்ளன. அவை அனைத்தும் ஆங்காங்கே தொக்கி நின்றாலும் மீண்டும் அவற்றைப் பற்றி நினைவூட்டுவது எமது சனநாயக மயமாக்கல் இயக்கத்திற்கு பிரயோசனமாக அமையும்.

- 1972ஆம் ஆண்டு அரசு சுவீகரித்துக் கொண்ட லேக்ஹவுஸ் நிறுவனத்தின் உரிமையை விரிவாக்கம் செய்வதற்கான யோசனைகள் அவற்றுள் பிரதானமாகும். மிகப் பாரிய மக்கள் ஆணையுடன் 1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பொதுசன ஐக்கிய முன்னணி, அரச ஊடகங்களை மறுசீரமைப்பது தொடர்பான அதனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் முதற் கட்ட நடவடிக்கையாக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் உரிமையை விரிவாக்கும் பொருட்டு சிபாரிசுகளை முன்வைப்பதற்கு விசேட குழுவொன்றை நியமித்தது. சிதத் நாதலோச்சன, றொகான் எதிரிசிங்க, ஆர்.எம். குணசேகர, கலாநிதி ஜயதேவ உயன்கொட மற்றும் லக்ஷ்மன் ஜயவர்த்தன என்போர் இக் குழுவில் அடங்கினர். இக் குழு மிக முக்கியமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான பல விதப்புரைகளை முன்வைத்தது. ஆனால் இந்த யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இது தொடர்பாக ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையெடுத்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கமோ அதற்குப் பிறகு ஆட்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமோ, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கமோ எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

- சுயாதீன ஆணைக் குழுக்களைத் தாபித்தல் தொடர்பாக 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்னர் மக்கள் இயக்கமொன்று தோன்றியது. இது பல யோசனைகளை மக்கள் மற்றும் அரசியல் கலந்துரையாடல்களுக்குக் கொண்டு வந்தது. சுயாதீன ஊடக ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல் தொடர்பான கோரிக்கையும் இதில் அடங்கியது. அரசியலமைப்புக்கான 17வது திருத்தம் பாராளுமன்றத்தில் இதன் பிரகாரமே ஏகமனதாக நிறைவேறியது. எனினும் அரசியலமைப்பின் 17வது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்ட ஆணைக் குழுக்களுக்கு மத்தியில் ஊடக ஆணைக்குழு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக அரசாங்கமோ எதிர்க்கட்சியோ எவ்வித தெளிவுபடுத்தலையும் வழங்கவில்லை.

- 2002ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலின் மூலம் எதிர் கட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற அதிகாரத்தை தனதாக்கிக் கொண்டது. இதே வேளை ஜனாதிபதி பதவி பொதுசன ஐக்கிய முன்னணி வசம் இருந்தது. இதன் போது சகவாழ்வு அரசியலுக்கான வாய்ப்பும் தேவையும் உருவானது. இச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு இரண்டு நிபந்தனைகளை முன் வைத்தார். அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நடுநிலையாக இருக்க வேண்டுமென்பது அதில் ஒரு நிபந்தனையாகும். இந் நிபந்தனையை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் ஊக்கமெடுத்தாலும் அது வெற்றியளிக்கவில்லை.

- 2004ஆம் ஆண்டு ஜனாதிபதி அவர்கள் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மூன்று அமைச்சுக்களை சுவீகரித்துக் கொண்ட பின்னர் ஒரு அரசியல் நெருக்கடி உருவானது. ஜனாதிபதியையும் பிரதம மந்திரியையும் பிரதிநிதித்துவம் செய்து திரு. மனோதித்தவெல்ல மற்றும் திரு. மலிக் சமரவிக்கிரம ஆகியோர் பல சுற்று இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தினர். குறுகிய காலத்திற்கேனும் சகவாழ்வு அரசியல் நடவடிக்கை முறையைத் தயாரிப்பதற்கு முயற்சித்தமை இக் கலந்துரையாடல்களின் நோக்கமாக அமைந்தது.

இக் குழுவிடம் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அவர்கள் முன்வைத்த ஊடகம் தொடர்பான யோசனையில், அரசக் கட்டுப்பாட்டு ஊடகமானது பீ.பீ. சீ.யைப் போன்று பொதுசன சேவை ஊடகமாக மாற்றியமைக்க வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தார்.

இதன் படி :

- சகல அரச ஊடக நிறுவனங்களுக்கும் சுயாதீன நிருவாகக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.
- பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு மேலதிகமாக சகல ஊடகங்களினதும் தரம் மற்றும் நெறிமுறைகளை மேற்பார்வை செய்வதற்கான சபை என்ற பெயரால் அழைக்கப்படும் சுயாதீன நிறுவனமொன்றைத் தாபிக்க வேண்டும்.
- இதற்குப் பதிலாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சமர்ப்பித்த யோசனைகள் மூலம் குறிப்பிடப்பட்டதாவது: சுயாதீனத் தொலைக் காட்சி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபவாஹினி மற்றும் லக்ஹன்ட வானொலி என்பவற்றை கூடிய விரைவில் தனியார் மயப்படுத்த வேண்டும். மற்றும் அரச ஊடகங்களை மேற்பார்வை செய்வதற்கு சுயாதீன மேற்பார்வை குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்பனவாகும்.

- அதே போன்று ஊடகங்களுக்கான நெறிமுறைத் தொகுதியொன்றையும், தரங்களையும் தாபிப்பதன் பொருட்டு பொறிமுறையொன்றை அமைப்பதற்கு ஊடகப் பிரதிநிதிகளை ஊக்குவிக்க வேண்டுமெனவும் இதன் மூலம் பிரேரிக்கப்பட்டிருந்தது.

- இப் பிரேரணைகள் தொடர்பாக சாதகமான கலந்தரையாடல்களை நடத்துவதற்குப் பதிலாக அரசாங்கம் கலைக்கப்பட்டது. மீண்டும் பகைமை அரசியல் முதலிடம் பெற்றது. அரச கட்டுப்பாட்டு ஊடகங்கள் மீண்டும் அரசாங்க அதிகாரத்தின் அரசியல் கருவியாக மாறியது. மேற்படி சகவாழ்வு அரசியல் கலந்துரையாடலை வலுப்படுத்துவதற்கு இந் நாட்டு சிவில் சமூகம் முன்வராமை மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும். இலங்கையின், ஊடகங்கள் மட்டுமல்ல அத்தியாவசியமான ஏனைய சனநாயக மறுசீரமைப்புகளையும் முன்னெடுக்கவிருந்த அரிய வாய்ப்பினை இதனால் இழந்து விட்டோம்.

- இப் பொதுத் தேர்தலின் போது அரச ஊடகங்கள் தொடர்பான விவாதம் மிகவும் பலம் வாய்ந்த வகையில் களமிறக்கப்பட்டது. எதிர்கட்சி அரசியல்வாதிகள் பலர் அரச கட்டுப்பாட்டு ஊடகங்களின் பக்கச் சார்பான தன்மை தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு முறையிட்டனர். உயர் நீதிமன்றில் மனுக்களையும் தாக்கல் செய்தனர். தேர்தல் ஆணையாளர், அரசியலமைப்பின் மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் தேர்தல் காலப் பகுதியில் அரச இலத்திரனியல் ஊடகங்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைமை தொடர்பான பல வழிகாட்டல்களை விதந்துரைத்தார். எனினும் இவ் வழிகாட்டல்கள் தொடர்சியாக மீறப்பட்டன. இந் நிலையின் கீழ் அரச வானொலியையும் ரூபவாஹினியையும் தான் சுவீகரித்துக் கொண்டு அவற்றுக்கு அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தரொருவரை நியமிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை மேற்கொண்டார். இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக அரச ஊடக நிறுவனங்கள் தகுதி வாய்ந்த அதிகாரியொருவரின் கீழ் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகும்.

- தேர்தலின் பின்னர் மீண்டும் ஒருமுறை அரச ஊடகங்களின் பயன்பாடு தொடர்பான சொல்லாடல் உருவானது. இதனை எதிர்கட்சி ஆரம்பித்து வைத்தது. அப்போது பாராளுமன்றத்தின் பெரும்பான்மை எதிர்கட்சிக்கே இருந்தது. அரச கட்டுப்பாட்டு ஊடகங்கள் தொடர்பாக சிவில் சமூக அமைப்புகளுடனான கலந்துரையாடலொன்றுக்கு 2004ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஒருங்கிணைந்த எதிர்கட்சி அழைப்பு விடுத்தது. அரச கட்டுப்பாட்டு ஊடகங்களுக்காக சுயாதீன ஆணைக் குழுவொன்றை தாபிக்க வேண்டுமென இக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இற்றை வரை இத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. எதிர்கட்சியும் இந்த ஆர்ப்பாட்டத்தை கைவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வனைத்து வளர்ச்சிகளும் இந்நாட்டு ஊடகங்களை சனநாயக மயப்படுத்தும் ஒரு பலமான நடவடிக்கையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச ஊடகங்களை பொதுசன சேவை ஊடகங்களாக மாற்றியமைக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளதென்பதை சுட்டிக்காட்டுகின்றன.

## பிரஜைகளின் நடவடிக்கை

எமது நாட்டின் ஊடகங்களது மறுசீரமைப்புத் தொடர்பாக அடிப்படையில் ஆட்சியிலிருந்த அல்லது ஆட்சிக்கு வருவதற்கு எதிர்பார்ப்புடன் இருந்த அரசியல் வாதிகளாலும், அரசியல் கட்சிகளாலும் இடையிடையே முன்வைக்கப்பட்ட சில யோசனைகள் மேலே காட்டப்பட்டன.

அதே போன்று எமது நாட்டைச் சேர்ந்த சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், நிறுவனங்களும் ஊடக மறுசீரமைப்பின் பொருட்டு நீண்டகாலமாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வார்ப்பாட்ட இயக்கத்தின் வலியுறுத்தலானது பல பிரதான காரணங்களின் மீது தங்கியுள்ளன. ஊடகங்களை அரசியல் மற்றும் ஏனைய அழுத்தங்களிலிருந்து சுயாதீனமாக்குவதற்குத் தேவையான கொள்கைகளை தயாரித்தல் இவற்றுக்கிடையில் உள்ளன.

1998ஆம் ஆண்டின் கொழும்புப் பிரகடனம், இவற்றுள் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இலங்கை எழுத்தாளர் ஒன்றியம், பத்திரிகை உரிமையாளர்களின் கழகம், இலங்கை தொழில்சார் பத்திரிகையாளர் சங்கம் மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் என்பனவற்றுடன் இணைந்து ஒழுங்கு செய்த பல கலந்துரையாடல் சபைகளின் பின்னர் இப் பிரகடனம், அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை பொதுசன சேவை ஊடகங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1988ஆம் ஆண்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும், சுதந்திர ஊடக இயக்கமும் ஒன்றிணைந்து சுயாதீன ஒலிபரப்பு அதிகார சபையொன்றுக்கான சட்ட வரைபு நகலொன்றை முன்வைத்தது. இவ்வரைபு பெரும்பாலும் இன்றைக்குக் கூட செல்லுபடியானதாகவுள்ளது.

2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஊடகவியலாளர்களின் சர்வதேச சம்மேளனம் சகலருக்கும் பொதுசன சேவை ஒலிபரப்பு என்ற பெயரில் ஆசிய ஊடக மாநாடொன்றை கொழும்பில் நடத்தியது. இம் மாநாடு கூட இலங்கை அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை பொதுசன சேவைகளாக மாற்றியமைக்குமாறு கோரி பொதுசன சேவை ஊடகத்திற்கான கொழும்புப் பிரகடனம் என்ற பெயரில் செய்தி நிருபமொன்றைச் சமர்ப்பித்தது.

2004 பெப்ரவரி மாதம் சகவாழ்வு அரசியலுக்கான மேடை உருவான சந்தர்ப்பத்தில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும், சுதந்திர ஊடக இயக்கமும் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அரசுக்கும் சொந்தமான ஊடகங்களை சுயாதீனம் மற்றும் நடுநிலைப் படுத்துவதற்கான ஆவணமொன்றைச் சமர்ப்பித்தன.

2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை பொதுசன சேவைகளாக மாற்றியமைப்பதற்காக "கண்" என்ற பெயரில் விபவி நிறுவனத்தின் தலைமையில் பொதுமக்கள் இயக்கமொன்று ஆரம்பமானது. இவ்வியக்கமும் பொதுசன பங்கேற்பிற்காக ஆவணமொன்றை அங்கீகாரம் பெறுவதன் பொருட்டு முன்வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்காலம்

இவ்வணைத்து சாதகமான வளர்ச்சிகளின் மத்தியில் கடந்த அரசாங்கம் அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தது என்பது தொடர்பான ஒரு வதந்தி உருவாகியது. உண்மையிலேயே இன்று கூட அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் தனியார் மயப்படுத்தப்பட வேண்டுமென கூறப்படும் நிறுவனப் பட்டியலிலே உள்ளன.

பொதுசன சேவை ஊடக விழுமியங்களை ஆரம்ப இடமாகக் கொண்டு நோக்கும் போது, இவ்வாறான நடவடிக்கை தேசியக் குற்றமாக அமையுமென நாம் கூற வேண்டும். செய்திகளை வெறுமனே ஒரு வியாபாரப் பண்டமாக்கக் கூடாது. அது ஒரு பொதுசன சேவையாகும்.

உலகிலுள்ள வெற்றிகரமான பொதுசன சேவை ஊடகங்களிலிருந்து கற்றுக் கொண்டு, எமது சாதகமான அனுபவங்களையும் பெற்றுக் கொண்டு, அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை பொதுசன சேவைகளாக மாற்றியமைப்பது, இன்று எம் முன்னிலையிலுள்ள அடிப்படை சனநாயக சவாலாகக் கருதுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுசன சேவை ஊடகம்

- சனநாயகம், பன்மைத்துவம் மற்றும் பிற கருத்துக்கள்என்பவற்றின் சகிப்புத் தன்மையை மேம்படுத்தும்.
- தரத்திற்காக பாடுபடும்.
- சரியானது, சமநிலையானது, உண்மையானது
- பிரஜைகளின் தேவைகளை பிரதிபலிக்கும்.
- சமூகத்தைப் புரிந்து கொள்வதற்காக சமூகத்திற்கு உதவி நல்கும்.
- பல்வேறு கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும்.
- பொது மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை ஆராயும்.
- வாசகர்கள் / பார்வையாளர்கள் என்போருடன் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும்
- பிரஜைகளின் முக்கியமான பிரச்சினைகளை வெளிக் கொண்டு வரும்.
- தீர்வுகளை ஆராயும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org